**உடுநுவர பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

உடுநுவர பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கன அடிப்படை பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, 2020 திசெம்பர் 31 இல் உடுநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசெயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், இவ்வறிக்கையில் 1.6.1(அ) அவதானிப்பு தவிர்ந்த, முன்னைய ஆண்டில், என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டிய 1.3.1(அ) மற்றும் (ஆ) கொண்ட கணக்கீட்டு குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | கணக்கீட்டு குறைபாடுகளை சரிசெய்ய வேண்டியமை |
| (ஆ) | சபைக்கு சொந்தமான பெறுமதி ரூபா 6,221,373 ஆன Compactor வண்டியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியமை |
| (இ) | மீளாய்வாண்டின் நிவாரண உதவி செலவு ரூபா 147,500 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஜர்னல் குறிப்பினூடாக எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியமை |
| (ஈ) | இடமாற்றம் பெற்று வந்த அலுவலர்களின் செலுத்தாத ரூபா 1,688,739 ஆன கடன் மீதியொன்று திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியமை |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் ரூபா 4,609,375 ஆன செலுத்த வேண்டிய 19 கடன்கொடுனர் மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியமை |
| (ஊ) | முன்னைய மற்றும் மீளாய்வாண்டில், தொங்கல் கணக்கின் மீதியை சீராக்க பயன்படுத்திய ரூபா 38,464,780 பெறுமதியான 05 ஜர்னல் குறிப்புக்களிற்கான விளக்கங்களை கணக்காய்வினால் ஏற்றுக் கொள்ள முடியாததால், இறுதி மீதிகள் சரியானதில்லை என அவதானிக்கப்பட்டன. | 2021 ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது தவறுகளை சீர்செய்கிறேன். | தொங்கல் கணக்கு சீர்செய்யப்பட வேண்டியமை |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 07 கணக்கு விடயங்களிற்குரிய கணக்குகள் பிரகார மீதி மற்றும் அட்டவணைகள் பிரகார மீதிக்கிடையில் ரூபா 2,300,047 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன. | வீதவரி மீதியை உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் மீது சரிசெய்வதாக மற்றும் ஏனைய அட்டவணைகளை சரிசெய்கிறேன். | அறிக்கைகளை சரியாக தயாரிக்க வேண்டியமை |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 4,650,856 ஆன 02 கணக்கு விடயங்களிற்குரிய சொத்துப் பதிவேடு, மதிப்பீட்டறிக்கை மற்றும் அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | 2018 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் பதிவேடுகளாவதுடன், சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | கணக்காய்விற்கு தேவையான சான்றுகளை சமர்பிக்க வேண்டியமை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 21,313,313 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவினம் ரூபா 8,766,539 ஆனது. இதற்காக மீண்டுவரும் செலவினம் குறைவடைந்தமை மற்றும் சேவைக் கட்டண வருமானம் அதிகரித்தமை காரணமாக அமைந்திருந்தன.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| வீதவரி<br><br>2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் வருமான சேகரித்தலின் போது, ஏற்பட்டிருந்த நிதி மோசடிகள் வெளிப்படுத்தப்பட்டமையும், அந்நிதி மோசடி தொடர்பான தகவல்கள் களத்திலிருந்து தற்போதும் வெளியாகிக் கொண்டிருப்பதாக வருமான பரிசோதகர் குறிப்பிட்டுள்ளமை மற்றும் ஆரம்ப மற்றும் இறுதி விசாரணைகள் மூலம் ரூபா 1,028,451 ஆன வீதவரி நிலுவை மீதியொன்று அறவிட வேண்டிய வீதவரி மோசடி கணக்கு என மீளாய்வாண்டு இறுதி திகதியில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளமை, கடந்த ஆண்டில் நிலவிய இம் மீதி தீர்கப்படாமை எனும் காரணங்களின் மீது மீளாய்வாண்டு இறுதி திகதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 28,298,081 ஆன நிலுவை மீதியில் சரியான தன்மை பற்றி கணக்காய்வின் போது திருப்திப்பட முடியாதிருந்தது. | சீர்செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன். | சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை |
| (ஆ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்<br><br>மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 திசெம்பர் 31 திகதியன்று கிடைக்க வேண்டியதான நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 25,357,540 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 31,824,458 அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | பெறவேண்டிய வருமானத்தை அறவிட வேண்டியமை |
| (இ) கடை வாடகை | | |
| (i) கடையறைகளை குத்தகைக்கு பெற்ற மூன்று குத்தகைதாரர்கள் அவற்றை உப குத்தகை வழங்கியிருக்கையில், புதிய வியாபார கட்டிடத்தொகுதியில் மீண்டும் 03 கடையறைகளை வழங்க உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தன. | கடையறைகளை வழங்கும் போது இந் நபர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கமாட்டேன். | கடையறைகளை குத்தகை வழங்கல் ஒழுங்கான முறைமையொன்றின் கீழ் மேற்கொள்ள வேண்டியமை |
| (ii) கெலிஓய பேரூந்து தரிப்பிட அருகில் அமைந்துள்ள சட்டி பானை விற்பனைகாக நடாத்திச் செல்லும் கடையறைக்காக 2014 ஆண்டின் பின்னர் புதிய மதிப்பீட்டை பெற்றுக் கொள்ள மற்றும் ரூபா 99,650 ஆன நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரச்சினை ஒன்று காணப்பட்டதுடன், அதனை தீர்த்து, நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | நிலுவை அறவிட வேண்டியமை |

## 2.3 மிகைக் அறவீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புக் கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் மீளாய்வாண்டின் போது, ரூபா 1,160,960 பெறுமதியான 02 மிகை அறவீடுகள் விதிக்கப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட மிகை அறவீட்டுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,085,285 பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்காக குறித்த தரப்பினருக்கு கடிதம் அனுப்பியிருப்பதாக அறிவிக்கிறேன். | மிகை அறவீடு அறவிடப்பட வேண்டியமை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 05 ஆண்டு காலமொன்றை விஞ்சியிருந்த கூட்டுத் தொகை ரூபா 11,177,694 ஆன வீதவரி மற்றும் நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்காததுடன், ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடையிலான கால வீச்சளவை கடந்துள்ள கூட்டுத் தொகை ரூபா 6,968,123 ஆன வேலை மற்றும் பொது வழங்கல் கடன்கொடுனர் மீதியை தீர்த்திருக்கவில்லை. | குறித்த தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர் காலத்தில் வழக்கு தாக்கல் செய்து அறவிட மற்றும் கொடுப்பனவை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட வேண்டியமை மற்றும் கொடுப்பனவுகளை தீர்க்க வேண்டியமை |